
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 குரல் - 136 சனிக்கிழமை 21.09.2024 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 10

## இலங்கையின் 9வது ஜனாதிபதித் தேர்தல்!

### மக்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றார்கள்






## தியாக தீபம் திலீபனின் ஆவணக்காட்சியகம் நல்லூரில்



## தமிழ் மக்கள் தங்களைத் திரட்டாமல் உலக சமூகத்தைத் திரட்ட முடியாது!

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## கொள்கைக்கே தமிழரின் வாக்கு!

ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையும் என இப்போதைக்கு யாராலும் நிச்சயப்படுத்திக் கூறிவிடமுடியாத நிலையொன்று ஏற்பட்டுவிட்டது. போட்டியிடும் 39 வேட்பாளர்களில் யாரை மக்கள் முதன்மை நிலைக்குக் கொண்டுவரவிருக்கிறார்கள் என்பது வாக்காளர்களுக்கே தெரியும்.

ஒவ்வொரு அமைப்புகளும், தனிப்பட்ட சிலரும் தங்கள் கருத்துக் கணிப்புகளை வெளியிட்டுவருகின்றனர். இது வேட்பாளர்களதும் கருத்துக் கணிப்புக்களை நடத்துபவர்களதும் எதிர்பார்ப்புகளைப் பொறுத்ததே. இம்முறை எவரும் எதிர்பார்க்காத வகையில் 50 வீத வாக்குகளை எந்த ஒரு வேட்பாளரும் பெறப்போவதில்லை என கணிசமாக பேசப்படுகின்றது. ஆயினும் ஒரு சில தரப்பிலிருந்து கருத்து அனுரகுமார திசாநாயக்க அந்த 50 சதவீத வாக்கை பெற்று வெற்றியைப் பெறுவார் என்றிருக்கிறது.

வட – கிழக்கு நோக்கி தங்கள் கரிசனையை செலுத்திய பிரதான வேட்பாளர்கள் தமிழ் மக்களது வாக்குகளை இலக்குவைத்து பிரச்சாரங்களை மேற்கொண்டனர். ஆயினும் தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து இவர்களில் யாரும் பகிரங்கமாக விளக்கமளிக்கவுமில்லை. அலட்டிக் கொள்ளவுமில்லை. சஜித் 13ஐ அமுல்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார். நாமல் ராஜபக்ஷ எந்தவித அதிகார பரவலாக்கலுக்கும், குறிப்பாக 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் காணி, பொலீஸ் அதிகாரங்களை வழங்குதல் சாத்தியமற்றது என்று தெளிவாக தெரிவித்துவிட்டார்.

ரணில், சஜித், அனுர என மும்முனை எதிர்பார்ப்பு இருக்கின்ற நிலையில், வடக்கு கிழக்கை அங்கத்துவப்படுத்தி தமிழ் அணியினர் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினர். தமிழ் மக்களுடைய பிரச்சினைகளையும் உரிமைகளையும் சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்துவதற்கான ஒரு குறியீடாக இது காட்டப்படவேண்டும் என்பதே அதன் நோக்கம்.

தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்தக் கோட்பாட்டில் அவ்வளவாக அக்கறை செலுத்தவில்லை. மேலும் ஒரு ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள தமிழ் வேட்பாளர் பொருத்தமான ஒருவராக அமையவில்லை என்பது தமிழ் தரப்பில் உள்ள மிகப்பெரிய பலவீனமாகும்.

கடந்த காலங்களில் இரண்டு ஜனாதிபதி தேர்தலில் குறிப்பாக மஹிந்த ராஜபக்சே, சரத் பொன்சேகா போன்றவர்களை தமிழ் மக்கள் ஆதரிக்கும்படி தமிழ் அரசியல் கட்சிகள் கூறி அதன்படி வடகிழக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது வாக்குகளை சரத் பொன்சேகா, மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்கியிருந்தனர். இவர்களாலேயே தான் தமிழ் மக்கள் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டார்கள். அவ்வாறான நேரத்தில் இவர்களை ஆதரித்த தமிழ் கட்சிகள் இன்று அவர்களால் எந்த பயனும் இல்லை. இந்த சிங்கள தேசியவாதத்தால் எந்த உரிமையும் வழங்கப்படப்போவதில்லை என்று கூறி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கக் கோருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக மிதவாதத்துடன் தொடங்கி கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடத்தி 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் அந்தக் கோரிக்கைகள் யாவும் புதைந்து போனதாகவே கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து மீளவும் ஜனநாயக ரீதியில் தமிழ் தேசியக்கட்சிகளின் தலைமைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்திவருகின்றனர். இந்த வலியுறுத்தலிலன் ஒரு பகுதியாக இந்தத் தமிழ் பொது வேட்பாளரை அனைவரும் கொள்ளமுடியும்.

80களில் தமிழ் இளைஞர்களின் போராட்டத்துக்கு இந்தியா பேராதரவு வழங்கியிருந்தது. தமிழ் போராளிகளுக்கு இந்திய அரசாங்கம் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கியிருந்தது. திம்புவில் பேச்சுவார்த்தை நடந்தப்பட்டது. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 13ஆவது திருத்த சட்டம் வந்ததது.

இந்தியா தவிர மேற்குலக நாடுகளும் அக்கறையும் ஆதரவும் வழங்கியிருந்தாலும், மேலும் ஆதரவுக்காக தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தரப்பும் தம்பங்கையும் காண்பித்தே ஆகவேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அந்த வகையில் தமிழர்களின் உரிமைகளை அடைந்து கொள்வதற்கான உரிமைப் போராட்டத்தின் சார் நிலைப்பாடே தமிழ் மக்களுடைய தீர்மானமாக இருக்கவேண்டும். அதுவே தமிழர்களின் கொள்கைப்பிடிப்புமாகும்.

# இலங்கையின் 9வது ஜனாதிபதித் தேர்தல் இன்று!

## மக்கள் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றார்கள்

இலங்கையின் 9வது ஜனாதிபதித் தேர்தல் சற்று முன்னர் ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க தொடங்கியுள்ளனர் வடக்கு, கிழக்கு எங்கும் தமிழ் மக்கள் தங்களுக்கான பொது வேட்பாளரை தெரிவு செய்வதில் முழு ஆர்வத்துடன் வாக்களிப்பு நிலையம் செல்வதை காணக் கூடியதாக உள்ளது. தமிழ் மக்கள் தேர்தலிலும் ஜனநாயக குருஷேத்திரப் போரில் கிருஷ்ணர் கையில் முழங்கிய பாஞ்சனியம் எனும் வெற்றிச் சங்கிற்கு வாக்களிக்க தொடங்கியுள்ளார்கள்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும் சில முதியவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த ‘சங்கே முழங்கு, திரைப்படத்தைப் பற்றியும் அதன் நினைவுகள் பற்றியும் அந்த காலம் மீண்டும் மலர்ந்துள்ளதாக தங்களுக்குள் உரையாடி கொண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. வாக்களிப்புக்கு செல்லும் இளையோர்கள், முதியோர்களின் உரையாடலை கேட்டு தாங்களும் சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க போவதாக தெரிவித்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

மேலும் தேர்தல் கடமையில் இருக்கும் ஸ்ரீலங்கா காவல் துறையினர் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதையும், இலங்கை தேர்தல் திணைக்களம் வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் சிரமம் இன்றி வாக்களிக்கக்கூடிய வகையில் ஒழுங்குகளை சரியாக மேற்கொண்டு இருந்ததையும் கவனிக்க கூடியதாக இருந்தது.

*- எமது தேர்தல் நிருபர்*

# தியாக தீபம் திலீபனின் ஆவணக்காட்சியகம் நல்லூரில்













தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்காலச் சந்த தியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத் தியம்பும் “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!” எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக்காட்சியகம் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலய முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி யளவில் மாவீரர்களின் பெற்றோர் கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக் கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் வரலாறு, புகைப்படங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தி ஆரம்பமாகியதுடன் பின் வரலாற்று ஆவணக் காட்சியகம் மாவீரர்களின் பெற்றோரால் சுடரேற்றி ஆரம் பித்து வைக்கப்பட்டது.

# அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் தேர்தல் நிறுத்தப்படும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பின் போது அசம்பாவிதங்கள் நிகழ்ந்தால் தேர்த்தல் முடிவுகள் அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலையத்தில் ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாக இருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்குகளை சூனியமாக்கப்படும்.

அந்தத் தொகுதிகளில் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும் வரையில் நாடாளவிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தேர்தல் வாக்களிப்பு**

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பன்றி சுமுகமான முறையில் தேர்தலை நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தரப்பினருக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வாக்கு உங்கள் உரிமை, அதனை நாட்டு மக்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

தேர்தல் காலத்தில் சட்டத்தை கடுமையாக செயற்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு அவசர நிலைமையின் போதும் அழைப்பதற்காக முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வன்னி தேர்தல் தொகுதியில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

வன்னி தேர்தல் தொகுதியில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 20.09.2024 இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு மாவட்டத்தில் 89, 889 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் 137 வாக்கெடுப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வன்னி தேர்தல் தொகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தலுக்கான மிக முக்கிய ஏற்பாடாகிய வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்கு பெட்டி, வாக்கு சீட்டு அனுப்புகின்ற பணி நிறைவடைந்ததுள்ளது.


இன்று காலை முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலத்திலிருந்து 137 வாக்களிப்பு நிலையங்களுக்கு அதற்கு பொறுப்பாக இருக்கின்ற சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர் தலைமையில் வாக்கு பெட்டி, வாக்கு சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை கண்காணிக்கும் பணியிலே 38 வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதற்கு பொறுப்பாக இருக்கின்ற தெரிவு அத்தியட்சக அலுவலகர் இந்த கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானைகள் தொல்லை இருப்பதால் அதை எதிர்கொள்ள கூடிய விடயம் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

இந்த பணியில் குறிப்பாக கிராம அலுவலர்கள் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் பொறுப்பாகவுள்ள பிரதேச செயலாளர்கள் இதனை கவனிக்கவுள்ளார்கள்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சமூக ஊடகங்கள் குறித்து பொலிஸாரின் எச்சரிக்கை



சமூக ஊடகங்கள் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நாட்களிலும் தேர்தலுக்குப் பின்னரும் பிரசார நடவடிக்கைகள் முடிந்தாலும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டால் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, குறிப்பாக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு தனியான சேவை ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேர்தல் கடமைகளில் இருந்து 9 அரச அதிகாரிகள் நீக்கம்!

அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எம். பி.சுமணசேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலே தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையை அடுத்து 19 அதிகாரிகளில் 9 பேர் தேர்தல் கடமைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடமைகளில் இருந்து நீக்கப்பட்டவர்களின் வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன என்று மாவட்ட தேர்தல் அதிகாரி சுமனசேகர தெரிவித்துள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தில் தகுதி பெற்ற வாக்காளர்கள்

### - அரசாங்க அதிபர் வெளிப்படுத்திய தகவல்



ஜனாதிபதித் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555,432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தகஅபே விக்ரம தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் (19.09.2024) ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல் தினத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிஸார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**வாக்களிப்பு நிலையங்கள்**

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளது. அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் வாக்கு எண்ணும் பணி நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் 184 அம்பாறை வாக்களிப்பு நிலையங்கள், 93 சம்மாந்துறை வாக்களிப்பு நிலையங்கள், 74 கல்முனை வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் 177 பொத்துவில் வாக்களிப்பு நிலையங்கள் உட்பட 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**வாக்குச்சீட்டு**

இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும், இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்துமாறும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையத்தில் செப்டம்பர் 21ஆம் திகதி காலை 07 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பிக்கப்படும். பிற்பகல் 04 மணிக்கு வாக்களிப்பு நிலைய வரிசையில் தரித்து நிற்கின்ற வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, பிற்பகல் 04 மணிக்கு பின்னர் வாக்களிப்பு நிலையத்தினுள் உட்பிரவேசிக்க முடியாது.

## பொருளாதார மீட்சியின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தல்

ஜனாதிபதி தேர்தலில், இடதுசாரிப் போட்டியாளர்களை எதிர்கொள்ளும் தற் போதைய ரணில் விக்ரமசிங்க தலைமையிலான பலவீனமான அரசாங்கம், பொரு ளாதார மீட்சியின் தலைவிதியை நிர்ண யிக்கும் முடிவுடன் தேர்தலில் களம் இறங்குகிறது.



கடுமையான போட்டி நிலவும் தேர்தலில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக சனிக்கிழமை வாக்களிக்கிறார்கள்.

2022 இல் கடுமையான டொலர் பற்றாக் குறைக்குப் பிறகு சரிந்த பொருளாதாரம், வாக்காளர்களுக்கு முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

**எதிர்கால அரசியல்**

எனினும், இந்த ஆண்டு முதல் முறையாக உள்நாட்டு பொருளாதாரம் வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளதுடன் மில்லியன் கணக்கானவர்கள் வறுமை மற்றும் கடனில் மூழ்கி உள்ளனர்.

இருப்பினும், நம்பிக்கைகளுடன் தங்கள் அடுத்த தலைவரை, அவர்கள் தெரிவு செய்யவுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கையர்கள் இன் னும் சிரமப்பட்டு வரும் நிலையில், ஜனா திபதித் தேர்தல் பதற்றமானதாகவும், நாட்டின் எதிர்கால அரசியல் பாதையை அமைப்பதில் முக்கியமானதாகவும் இருக்கும் என உறுதியளிக்கிறது என்று சர்வதேச நெருக்கடிக் குழுவின் இலங்கைக்கான மூத்த ஆலோசகர் அலன் கீனன் ரோயட்டரிடம் தெரிவித்துள்ளார்.

தேசியம்

# 76 வருட கால வரலாற்றில் மிக நிர்ணயமான ஒரு கட்டம்...

# தேர்தல்



Sayanika srikanth
- University of jaffna

2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பானது நாட்டின் அரசியலமைப்பிலும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்திலும் வேரூன்றியுள்ளது. அந்த வகையில் தேர்தலுக்கான தகுதி என்பது ஒரு நபருக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஒரு வேட்பாளர் இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும், அவர்கள் வேறு எந்த நாட்டிலும் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கக் கூடாது. போன்ற தகுதிகளினை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் வாக்களிக்க உரித்துடையவர்கள் இலங்கை பிரஜையாக 18 வயதினை தாண்டியவராக இருக்க வேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு விடயங்களும் ஒரு வேட்பாளரும் வாக்களிப்பவரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுவதாகும்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ஆனது மிகுந்த சவால் மிக்க தேர்தலாகவும் விருப்பு வாக்கின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலாகவும் அமைய அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே அனைவரும் விருப்பு வாக்குகளை வெவ்வேறுபட்ட மூன்று பேருக்கு அளிக்க முடியும்.

**வாக்களிப்பு முறை 1 -** ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் × என அடையாளம் விடலாம் அல்லது 1 என இலக்கமிடலாம். × என அடையாளம் இட்டால் ஏனைய விருப்பு வாக்குகளை செலுத்த முடியாது. அவ்வாறு செலுத்தினால் அது செல்லுபடி அற்றவாக்காக கருதப்படும்.

**வாக்களிப்பு முறை 2 -**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னும் ஒருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு இரண்டு வாக்குகளை அளிக்க முடியும்.

**வாக்களிப்பு முறை 3 -**

ஒருவர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் 1 எனவும் இன்னொருவருக்கு 2 எனவும் இன்னும் ஒருவருக்கு 3 எனவும் இலக்கமிட்டு மூன்று வாக்குகளை அளிக்க முடியும்.

இவற்றைத் தவிர வேறு ஏதாவது ஒரு வகையில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக கருதப்படும்.

தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் ஒரு வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்றால் 50% மான வாக்குகளை பெற வேண்டும். ஒருவேளை எந்த ஒரு வேட்பாளரும் 50 விதமான வாக்குகளனை பெற்றிருக்காவிடின் என்ன நடக்கும் என்பதே இன்று பலரின் கேள்வியாக இருக்கின்றது. இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழு இரண்டாவது வாக்கு எண்ணும் முறைக்கு செல்லும். அதாவது எவரும் 50 விதமான வாக்கு பெறாத நிலையில் முதலாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவர்கள் இணையும் இரண்டாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவர்கள் இணையும் தேர்ந்தெடுப்பார்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்களிப்பு அட்டையை எடுத்து அங்கு அளித்திருக்கும் விருப்ப வாக்குகளின் எண்ணிக்கையை சேர்த்து எடுத்து இரண்டு கட்சிக்கும் வழங்குவார்கள். அதன்பின் முன்பிருந்த வாக்குகளின் எண்ணிக்கையும் மற்றும் குறித்த கட்சிக்கு கிடைத்த விருப்பு வாக்குகளின் அடிப்படையிலும் ஜனாதிபதி தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படுவார்.

அந்த வகையில் 1981 ஆம் ஆண்டின் 15ம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான பிரகடனத்தை வெளியிடும் திகதி, பெயர் குறித்த நியமங்களை ஏற்கும் திகதி என்பவற்றை ஜூலை மாதம் 26 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு தெரிவித்து இருந்தது.

இதன் அடிப்படையில் இலங்கை நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 21.9.2024 அன்று இடம்பெற உள்ளது. அந்த வகையில் ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் 14.8. 2024 அன்று நிறைவடைந்திருக்கும் தருவாயில் தேர்தலுக்கு போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணத்தினை (அரசியல் கட்சி 50000. 00, சுயேட்சை 75000.00) செலுத்தியிருந்தனர். அத்துடன் வேட்புமனுத்தாக்குதல் 15.8.2024 அன்று காலை இடம் பெற்றதுடன் இதில் கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க , சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸ்ஸநாயக்க, நாமல் ராஜபக்ஷ, சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ஷ, அரியநேந்திரன் உள்ளிட்ட 39 பேர் போட்டியிட உள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பதிவு செய்யும் அனைத்து பெரும் போக்கு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கருத்துக்களை பதிவு செய்யும் அரசியல் விமர்சகர்கள் அனைவரும் பொதுவாக பயன்படுத்தும் ஒரு சொல் 'தீரணாத்மக' என்பது இது தமிழில் அதனை 'இரண்டில் ஒன்று முடிவாகப் போகும் தருணம்' என்று சொல்லலாம்.


முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்தத் தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பை கொண்டு இருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதித் தேர் தல்களில் இதுவரையில் இருந்து வந்த இருமுனைப் போட்டியில் இந்த தடவை ஒரு நான்குமுனைப் போட்டியாக மாற்ற மடைந்திருப்பது முதல் விடயமாகும். தேர்தல்களில் இதுவரையில் ஐந்து வீதத் திற்கு குறைவான வாக்குகளை மட்டுமே பெற்று வந்த ஒரு விளிம்பு நிலைக்கட்சி ஒரு முதன்மை போட்டியாளராக எழுச்சியடைந் திருப்பது இரண்டாவது சிறப்பு விடயமாகும். 1990 தொடக்கம் ஜனாதிபதி தேர்தலில் எதிரெதிராக இனவாதமாக பார்க்கப்பட்ட தமிழ் சிங்கள சமூகத்தினரின் பிரிவினைவாதம் தீவிரவாதம் இன்று பிரச்சார மேடைகளில் இருந்து தலைமறைவாகி இருக்கின்றது மற்றுமோர் முக்கிய விடயமாகும். அதாவது கடந்த 20 ஆண்டுகளில் வெளிப்படையாக இனவாதம் பேசப்படாமல் நடாத்தப்படும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு தரப்புகளால் பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள் மீண்டும் மீண்டும் இதனை உறுதி செய்கின்றனர். அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அணி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக் கும் அரசியல்

(9ஆம் பக்கம் பார்க்க)



# ஐரிஷ் பொபி சான்ட்ஸின் உண்ணா விரத போராட்டம் ! அகிம்சையின் உச்சந் தொட்ட தியாக தீபம் திலீபன்!



-நவீனன்

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

**ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்:**

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர். அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு

**எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்..!**

பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாட்களில் முடிவுக்கு வந்தது. ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம்திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

ரொபேர்ட் ஜெரார்ட் சான்ட்ஸ் *(Robert Gerard Sands>* 'பொபி சான்ட்ஸ்' (*Bobby Sands*, மார்ச் 9, 1954 - மே 5, 1981), ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த போராளியும், ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ். ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பை ஆரம்பித்தனர். இவர் உண்ணாநோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

**தமிழரின் உரிமைகளுக்காக திலீபன்:**

அன்று ஐரிஷ் மக்களின் எழுச்சிக்கு அகிம்சை ரீதியில் குரல் கொடுத்தது போல, தமிழரின் உரிமைகளுக்காக,

மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்,

சிறைச் சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப்பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக காவல் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும், என்ற ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்டம்பர் 15ம் திகதி நல்லைக் கந்தனின் முன்றலில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தது இந்திய இலங்கை ஒப்பந்தம். தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை, தமிழர் நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை மிக வேகமாக தொடர்வதற்கு வழி வகுத்தமையால்,

மகாத்மா காந்தி இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையைக் கையில் எடுத்து, அகிம்சையின் அடையாளமாக உலகிற்கு முன் நிமிர்ந்தார் தியாக தீபம் திலீபன்.

**ஐரீஸின் திலீபன் பொபி சான்ட்ஸ்**

தங்களை அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும் ,சிறையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிறுத்தவேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து பொபிசான்ட்ஸ் அவரது தோழர்கள்

உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே



ஐரீஸ் குடியரசு இயக்கம் *(Irish Republican Movement )* சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

பொபி சான்ட்ஸ், அயர்லாந்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த ஒரு ஐரிஸ் சாதாரண போராளி. பிரித்தானியர்களின் அதிகாரத்திற்கு எதிராக அரசியல்ரீதியாகவும், ஆயுதரீதியாகவும் போராடிக்கொண்டிருந்த ஐரிஸ் குடியரசு இராணுவத்தில் (ஐசுயு) தன்னை இணைத்துக் கொண்ட போது அவருக்கு வயது 18.

ஐரிஷ் விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்தவுடனேயே ஏகாதிபத்திய அரசு சிறைப்படுத்தியது.சட்ட விரோதமாக துப்பாக்கி பயன்படுத்தியது,பெருவாரியான ஆயுதங்களை பதுக்கிவைத்தது, வெடிகுண்டு வழக்கு என தொடர்ச்சியாக சிறையிலடைத்தது.

சிறையில் அரசியல் கைதிகள் குற்றவாளிகளை போல நடத்தப்பட்டனர், அவர்களது தார்மீக உரிமைகள் மறுக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்ச்சியாக ஆளாக்கப்பட்டனர்.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபிசான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப் படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம்மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொபிசான்ட்ஸின் மரணம் விடுதலைக்காக உலகமெங்கும் போராடி வரும் போராளிகளின் மனநிலையை பிரதிபலிக்கும். எங்கள் மீதான பழிவாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற அவரின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒருநாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது.

**விண்ணிலிருந்து விடுதலையை பார்ப்பேன்!**

மரணத்தின் தறுவாயில், விண்ணிலிருந்து பார்ப்பேன் விடுதலையை என்ற தியாக தீபம் திலீபனின் வார்த்தைகள் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை உத்வேகப்படுத்தியது.

கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக்கூடாது. நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக்கூடாது. இறக்கும் வரை எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக்கூடாது" என்பதை உறுதிப்படுத்தி

(8ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் மக்கள் தங்களைத் திரட்டாமல் உலக சமூகத்தைத் திரட்ட முடியாது



**நிலாந்தன்**

பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை முதலில் முன்வைத்த மு.திருநாவுக்கரசு தமிழகத்தில் தங்கியிருப்பதனால், அவர் இந்தியாவின் ஆள் என்ற சந்தேகம். அதனால், பொது வேட்பாளரை இந்தியாவின் ப்ரொஜக்ட் என்று சந்தேகித்தார்கள். அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை தொடர்ந்து வளர்த்துச் சென்றபடியால் அதுவும் இந்தியாவின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகம். இம்முறை தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விடயத்தை கையில் எடுத்தார். அதனால் அது இந்தியாவினுடைய வேலையாகத்தான் இருக்கலாம் என்ற சந்தேகத்தை முன்வைத்தவர்கள் மேலும் உஷ ாரானார்கள். அதன்பின் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரு காணொளி ஊடகத்தின் அனுசரணையோடு இயங்கிய ஒரு குடிமக்கள் சமூகம் பொது வேட்பாளர் தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தியது. அக்குடிமக்கள் சமூகத்தின் பிரதானியாக இருப்பவர் 13ஆவது திருத்தத்தை தொடர்ச்சியாக ஆதரித்து வருபவர். அவர் அதை வெளிப்படையாகத்தான் செய்கிறார். எனவே அந்தச்சிவில் சமூகம் இந்த விடயத்தைக் கையில் எடுத்த காரணத்தால் அது இந்தியாவினுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் மேலும் அதிகரித்தது. முடிவில் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதற்கு ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கிய பொழுது,அதில் உள்வாங்கப்பட்ட பெரும்பாலான கட்சிகள் இந்தியாவுக்குக் கடிதம் எழுதியவை. அதனால் சந்தேகம் மேலும் கூடியது.

மேற்சொன்ன சந்தேகங்கள் அவ்வளவும் போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு. எதுக்கெடுத்தாலும் இந்தியாவின் சதி என்று குற்றஞ்சாட்டும் அக்கட்சியானது,பொது வேட்பாளர் என்ற விடயம் இந்தியாவின் அனுசரணையோடு மேடையேற்றப்படும் நாடகம் என்று கூறிவருகிறது.

அதேசமயம் பொது வேட்பாளரைக் கண்டு பயப்படும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியானது அதனை வேறுவிதமாக அணுகியது.சுமந்திரன் இந்தியத் தூதுவரை சந்தித்து பொது வேட்பாளர் தொடர்பாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அவர் தெரிவித்த கருத்துக்களை தனக்கு விசுவாசமான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியே கொண்டு வந்தார்.அந்தச் செய்திகள் யாவும் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. தென்னிலங்கையில் உள்ள யாரோ ஒரு வேட்பாளரோடு பேச்சுவார்த்தைக்கு போகுமாறு கேட்கிறது என்பதைச் சாராம்சமாகக் கொண்டிருந்தன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கைக்கு வந்த எந்த ஒரு இந்திய பிரதானியும் இதுவரை பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கவில்லை என்பதே தொகுக்கப்பட்ட அவதானிப்பு ஆகும்.

தமிழரசு கட்சிக்குள் சிறீதரன் அணி பொது வேட்பாளரை வலிமையாக ஆதரிக்கிறது.சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான மோதலுக்குள் பொது வேட்பாளர் எப்பொழுதோ சிக்கிவிட்டார்.இந்நிலையில் சிறீதரனை பலவீனப்படுத்துவதற்காகவும் பொது வேட்பாளரைப் பலவீனப்படுத்துவதற்காகவும் இந்தியா பொதுவேட்பாளர் என்ற தெரிவைக் குறித்து மகிழ்ச்சியாக இல்லை என்ற செய்தியை சுமந்திரனுக்கு நெருக்கமான பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்தன. அதன்மூலம் சிறீதரன் இந்தியாவுக்கு விருப்பமில்லாத ஒரு விடயத்தை செய்கிறார் என்பதை அவருக்கு குறிப்பாலுணர்த்த முற்பட்டன.

ஆனால் இந்த இடத்தில் அப்பாவித்தனமான ஒரு கேள்வி எழும்.பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட் என்றால் பிறகு ஏன் இந்திய ராஜதந்திரிகளும் பிரதானிகளும் அவ்வாறு கருத்து தெரிவிக்கின்றார்கள்?

கடந்த வாரத்துக்கு முதல் வாரம் இந்திய பாதுகாப்புத் துறை ஆலோசகர் அஜித்குமார் டோவால் கொழும்புக்கு வந்திருந்தார்.அவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார்.அச்சந்திப்பின்போது அவர் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்து தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்தன. சந்திப்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு அதாவது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் பொதுக் கட்டமைப்புக்குள் அங்கும் வகிக்கும் கட்சிகளும் கலந்து கொண்டன.எனவே அக்கட்சிகளுக்கும் அவர் சொன்ன செய்தி அதுதான்.இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்பதனை அவர்கள் மறைமுகமாக உணர்த்த முற்படுகின்றார்கள். இந்தியாவின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் அவ்வாறு கூறிய பின்னரும் அது இந்தியாவின் ப்ரொஜக்ட்தான் என்று நம்புகிறவர்கள் இப்பொழுதும் நாட்டில் உண்டு.

இந்த விடயத்தோடு தொடர்புடைய மற்றொரு சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் கிளிநொச்சிக்குச் சென்றார்கள்.அங்கு அவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமாரை சந்தித்திருக்கிறார்கள்.அதன்பின் ஒரு தொகுதி ஊடகவியலாளர்களையும் சந்தித்திருக்கிறார்கள்.மேற்படி சந்திப்பானது சிறீதரனுக்கு சில செய்திகளை உணர்த்தும் நோக்கிலானது என்று அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகின்றது. சிறீதரனுடைய பலமான கோட்டையான கிளிநொச்சியில் அவருடைய அரசியல் எதிரியான சந்திரக்குமாரை அவருடைய அலுவலகத்திலேயே இந்தியத் துணைத் தூதுவர் தேடிச்சென்று சந்தித்து அவருக்கு ஒரு அந்தஸ்தை கொடுத்தமை என்பதும்,சந்திப்பின்போது சஜித் பிரேமதாசாவை ஆதரிக்குமாறு சூசகமாக வலியுறுத்தியமை என்பதும் சிறீதரனுக்கு சில விடயங்களை உணர்த்தும் நோக்கிலானவை. அதாவது பொது வேட்பாளரின் விடயத்தில் இந்தியா ஆதரவாக இல்லை.எனவே பொது வேட்பாளருக்கு எதிராக சஜித்தை ஆதரிக்கும் சந்திரகுமாரை தேடிச் சென்று சந்தித்ததன் மூலம் இந்தியா சிறீதரனுக்கு மறைமுகமாக அழுத்தம் கொடுக்க முற்படுகின்றதா?

எனினும் அச்செய்தி வெளிவந்த பின்னர்தான் சிறீதரன் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.அவருடைய கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட அந்த கூட்டத்தில் மாவட்டத்தில் எவ்வாறு பொது வேட்பாளருக்கு ஆதரவான பணிகளை திட்டமிட்டுப் பரவலாக்கலாம் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அதாவது சிறீதரன் பொது வேட்பாளரின் விடயத்தில் தொடர்ந்து உறுதியாக நிற்கிறார் என்ற செய்தி அந்த கூட்டத்தில் உண்டு.

மேலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் சிறீதரனுக்கு அடுத்தடுத்த நிலையில் உள்ள முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அதுவும் பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என்பதனை வெளிப்படுத்தியது.

இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு இப்பொழுது ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரியத்தொடங்கிவிட்டது. இந்திய வெளியுறவு அமைச்சர், இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஆலோசகர் ,கொழும்பில் உள்ள இந்தியத் தூ தர்,யாழ்ப்பாணத்தில் உள்ள உபதூதுவர் போன்றவர்கள் தென்னிலங்கையில் உள்ள யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிக்குமாறு கூறிவரும் ஒரு பின்னணியில்,பொது வேட்பாளர் இந்தியாவின் ப்ரொஜக்ட்

(8ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன்துறை சுண்ணாம்புக் குவாரிகளும் தற்கால நிலையும்





**ஜீவரத்தினம் கஜீபா**
ஊடக கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்

இலங்கையின் யாழ்ப்பாண தீபகற்பத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை பிரதேசப் பகுதியானது அதன் வளமான சுண்ணாம்புக் கற்களுக்கு புகழ் பெற்றதோடு தரைக்கீழ் நன்னீர் வளத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில், மூன்றாம் காலகட்டத்தைச் சேர்ந்த மயோசீன் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. இந்தப் பகுதியில் உள்ள சுண்ணாம்புக்கல் முதன்மையான உயிர்வேதியியல் ஆகும். இது பவளப்பாறைகள், ஃபோராமினி ஃபெரா மற்றும் மொல்லஸ்க்குகள் போன்ற கடல் உயிரினங்களின் எலும்புத் துண்டுகளிலிருந்து உருவாகிறது. மில்லியன் கணக்கான ஆண்டுகளில், இந்த எலும்புக்கூடுகள் கடல் அடிவாரத்தில் குவிந்து, சுருக்கப்பட்டு, இறுதியில் சுண்ணாம்புக் கல்லாக மாறியது. காங்கேசன்துறையின் சுண்ணாம்புக் கற்பாறைகள் அவற்றின் அளவு கலவை மற்றும் அவை உருவான சூழ்நிலைகள் ஆகியவற்றால் குறிப்பாக சுவாரஸ்யமானவை. இந்த கற்பாறைகளுக்குள் புதைபடிவங்கள் இருப்பது மயோசீன் சகாப்தத்தில் இப்பகுதியில் இருந்த கடல் சூழல்கள் பற்றிய மதிப்புமிக்க தகவல்கள் ஆதாரமாயுள்ளன.

இந்த கற்பாறைகளின் உருவாக்கம் இந்திய துணைக்கண்டத்தை வடிவமைத்த டெக்டோனிக் நடவடிக்கைகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் எழுச்சி, கடல் மட்ட மாற்றங்களுடன் இணைந்து இந்த சுண்ணாம்புக் கற்கள் வெளிப்படுவதற்கு வழிவகுத்தது. வானிலை மற்றும் அரிப்பு செயல்முறைகள் பாறைகள் உருவாவதற்கு மேலும் பங்களித்தன, ஏனெனில் பெரிய சுண்ணாம்புக் கற்கள் காற்றுநீர் போன்ற இயற்கை சக்திகளால் உடைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டன. காங்கேசன்துறை சுண்ணாம்புக் கற்பாறைகள் பலவிதமான பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இப்பகுதி ஒரு காலத்தில் ஆழமற்ற கடல் சூழலாக இருந்ததாகவும் பவளப்பாறை வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலைகள் இருந்ததாகவும் தெரிவிக்கபடுகிறது.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் இன்றைய நிலைமைகளைப் போலவே, மியோசீன்சகாப்தத்தில்வெப்பமான, வெப்ப மண்டல காலநிலையை புதைபடிவக் கூட்டமைப்பு குறிக்கிறது. இந்த புதைபடிவங் களின் ஆய்வு புவியியலாளர்கள் பண்டைய சூழல்களை புனரமைக்கவும் மற்றும் மில்லியன் கணக்கான ஆண்டுகளில் ஏற்பட்ட கடல் மட்டங்கள் மற்றும் காலநிலை மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும் உத வுகிறது. இந்தத் தகவல் கல்வி ஆராய்ச்சிக்கு மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்தின் பரந்த புவியியல் வரலாற்றையும் இன்றைய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை நிலைகளுக்கானஅதன் தாக்கங்களையும் புரிந்துகொள்வதற்கும் முக்கியமானது.



காங்கேசன்துறை சுண்ணாம்புக் கற்கள் இலங்கையில்பலதசாப்தங்களாகநிர்மாணத் துறையில் ஒரு மூலக்கல்லாக இருந்து வருகிறது. அதன் மிகுதியும் பிரித்தெடுக்கும் எளிமையும் பல்வேறு கட்டுமானப் பயன்பாடுகளுக்கு சிறந்த பொருளாக பயன் படுத்தப்பட்டு வந்தது. காங்கேசன்துறையில் சுண்ணாம்புக்கல் வெட்டி அருகிலுள்ள சீமெந்து தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அது சீமெந்தின் முக்கிய மூலப்பொருளான கிளிங்கராக பதப்படுத்தப்பட்டது.

இந்த செயல்முறையின் பொருளாதார முக்கியத்துவம் மகத்தானது, ஏனெனில் இது இலங்கையின் கட்டுமானத் துறையின் பெரும் பகுதியை ஆதரித்தது. இது நாடு முழுவதும் உள்ள உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வீட்டுத் திட்டங்களுக்கு பங்களித்தது. இருப்பினும் கூட போருக்கு பிற்பட்ட காலத்தில் சீமெந்து தொழிற்சாலை தாக்கப்பட்ட பின்னர் இவ்வேலைகள் இடை நிறுத்தப்பட்டு இன்றைய காலம் வரையிலும் மீள ஆரம்பிக்கவில்லை அத்தோடு அவை இப்போது இராணுவத்தின் இருப்பிடங்களாகவும் உள்ளன. ஆனால் முற்காலத்தில் சிமெண்ட் உற்பத் திக்காக தோண்டப்பட்ட பெரிய பெரிய கிடங்குக ளினால் இன்றும் கூட பல பிரச்சனைகளை மக்கள் எதிர்நோக்குக்கி ன்றனார்.

வரலாற்று ரீதியாக காங்கேசன்துறையில் இருந்து வந்த சுண்ணாம்புக் கற்களை கொண்டே இப்பகுதியில் ஏராளமான கட்டிடங்கள் மற்றும் நினைவுச் சின்னங் களின் கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. அத்தோடு ஒப்பீட்டளவில் மென்மையான தன்மை அதை எளிதில் செதுக்கி வடிவமைக்க அனுமதிக்கிறது. யாழ் குடாநாட்டில் உள்ள பல வரலாற்று கட்டிடங்கள் மத கட்டமைப்புகள் மற்றும் காலனித்துவ கால கட்டிடங்கள் உட்பட அவற்றின் கட்டுமானத்தில் காங்கேசன்துறை சுண்ணாம்புக் கல் இடம்பெற்றுள்ளது. கட்டுமானத்தில் இந்த சுண்ணாம்புக் கல்லைப் பயன்படுத்துவது பிராந்தியத்தின் புவியியல் வளங்களை மட்டுமல்ல அதன் கலாச்சாரபாரம்பரியத்தையும்பிரதிபலிக்கிறது ஏனெனில் உள்ளூர் கைவினைஞர்கள் பல நூற்றாண்டுகளாக இந்த பொருளுடன் வேலை செய்வதில் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டனர். சீமெண்டை உற்பத்தி செய்வதற்கு சுண்ணாம்பு (CaO) உற்பத்தி செய்வதற்காக ஒரு சூளையில் சூடாக்கப்படுகிறது பின்னர் அது களிமண் மற்றும் பிற பொருட்களுடன் கலந்து கிளிங்கரை உருவாக்குகிறது.

கிளிங்கரை நன்றாக தூளாக அரைத்து, ஜிப்சத்துடன் கலந்து சிமெண்ட் தயாரிக்கப் பட்டது. இவ்வாறாக அந்த கால கட்டடத்தில் சிமெண்ட் உற்பத்திக்காக சுண்ணாம்பு குவாரியினை அகழ்ந்ததன் விளைவாக தற்காலத்தில் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இவ்வாறாக சுற்றுச்சூழல் பாதிப்புகளாக வாழ்விட அழிவு மற்றும் பல்லுயிர் இழப்பு ஏற்படுகிறது. காங்கேசன்துறையில் சுண்ணாம்புக் கல் அகழ்தல் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக உள்ளூர் வாழ்விடங்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கம். குவாரிகளிலிருந்து சுண்ணாம் புக்கல் அகற்றப்பட்டதால் தாவரங்கள் அழிந்து வனவிலங்குகள் இடம்பெயர்ந்த நிலை ஏற்பட்டது.

இப்பகுதியில் உள்ளவை உட்பட ஏராளமான உயிரினங்களின் இயற்கை வாழ்விடங்கள் குவாரி நடவடிக்கைகளால் தற்காலத்திலும் பாதிக்கப்படுகின்றன, இது பல்லுயிர் வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறது. குவாரி யின் செயல்முறையானது நிலப்பரப்பை மாற்றியது. பெரிய குழிகளையும் கழிவுக் குவியல்களையும் உருவாக்கியது இது இயற்கையான வடிகால் வடிவங்களை சீர்குலைத்து மண் அரிப்புக்கும் வழி வகுத்தது.

மண்ணை நிலைநிறுத்துவதற்கு வேர்கள் இல்லாததால் தாவர உறைவிட இழப்பு இந்த சிக்கலை அதிகரிக்கிறது. இதன் விளைவாக ஏற்படும் மண் அரிப்பு அருகிலுள்ள நீர்நிலைகளில் வண்டல் படிவதற்கு வழிவகுக்கும் இது நீரின் தரம் மற்றும் நீர்வாழ்வை பாதித்தாதனால் நீர் மாசுபாடு, நன்னீர் பாற்றக்குறையை மக்கள் இன்றும் எதிர்கொள்கின்றனர். இது சுண்ணாம்பு குவாரியுடன் தொடர் புடைய மற்றொரு பிரச்சனையாகும். உள்ளூர் நீர் ஆதாரங்களை வண்டல் மற்றும் சுண்ணாம்பு செயலாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட இரசாயனங்கள் மூலம் சூழல் மாசுபட்டது.



சுற்றுச்சூழலில் இந்த மாசுபாடுகளை வெளியிடுவது நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப் புகளுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு சுத்தமான நீர் கிடைப்பது தற்காலத்தில் குறைவாகும். தற்காலத்தில் அப்பகுதியில் வாழும் மக்கள் தற்போது நீர் பிரச்சனைக்கு எதிர்கொள்ள நேரிடுகிறது. இயற்கை வளங்களையும் வரலாற்றுச் சிறப்புக்களையும் தன்ன கத்தே கொண்டிருக்கும் முக்கியம் வாய்ந்த இப்பகுதியில் அண்மைய ஆண்டு களில் அந்தப் பிரதேசம் புதிய நெருக்கடியொன்றைச் சந்தித்து வருகிறது. முறையான முகா மைத்துவமற்ற கழிவுகள் இங்கு கொட்டப் படுவதால் குடியிருப்புவாசிகளுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகள் மற்றும் ஆபத்தான பின்விளைகள் ஆகியவற்றை மக்கள் எதிர்கொள்ளுகின்றனர்.

தணிப்பு நடவடிக்கைகளாக காங்கேசன் துறையில் சுண்ணாம்புக் கல் அகழ்வினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க, பல தணிப்பு நடவடிக்கைகளை

*(9ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழ் மக்கள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறுவது எந்த வகை அறிவியல்?

அவ்வாறு சந்தேகிப்பவர்கள் மேலும் ஒரு தர்க்கத்தை முன்வைக்கின்றார்கள். பொது வேட்பாளர் சஜித்தின் வாக்குகளைக் கவர்ந்தால் ரணில் வெல்வார்.எனவே ரணிலை வெல்லவைக்க வேண்டும் என்ற இந்தியாவின் விருப்பத்தை பொது வேட்பாளர் நிறைவேற்றுகிறார் என்று ஒரு வியாக்கியானம். முதலாவதாக ரணில் ஆட்சிக்கு வருவதை இந்தியா விரும்புகின்றது என்பது சரியா? ரணில் விக்கிரமசிங்க புத்திசாலிதந்திரசாலிமுதிர்ச்சியானவர். அவர் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்துச் சமாளிக்கக் கூடியவர் என்பது ஒரு பொதுவான அவதானிப்பு ஆகும்.அவ்வாறு எல்லா நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளக்கூடிய ஒரு தலைவர் தெரிவு செய்யப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்பது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்த பொழுது தெரிய வந்தது.அதில் இந்தியா ரணிலுக்கு எதிராக நின்ற டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு தமிழ் கட்சித் தலைவர்களை கேட்டிருந்தது.

கடந்த சில வார கால நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால் இந்தியா வெளிப்படையாகவே சஜித்தை ஆதரிக்குமாறு கேட்கிறது என்று தெரிகிறது. அப்படியென்றால் இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று பொருள். இந்தியா பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிந்த பின்னரும் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் அணியை இந்தியா இயக்குகிறது என்று கூறுவது எந்த வகை அறிவியல் ?

ரணிலை வெல்ல வைப்பதற்கான இந்தியாவின் நிகழ்ச்சி நிரலைத்தான் பொது வேட்பாளர் முன்னெடுக்கிறார் என்ற சூழ்ச்சிக்கு கோட்பாடு சரியென்றால் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிரமான நிலைப்பாடுகள் தென்னிலங்கையில் யுத்த வெற்றிவாதத்தை தக்க வைக்க உதவும்.அதன்படி மஹிந்த ராஜபக்சவை பலமாக வைத்திருப்பதுதான் முன்னணியின் மறைமுக நிகழ்ச்சிநிரல் என்ற சூழ்ச்சிக் கோட்பாடும் சரியா?அல்லது பகிஷ்கரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்கள் யாரோ ஒருவருக்கு சாதகமானது என்று வியாக்கியானப்படுத்தலாமா? ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் விழும் மொத்த வாக்குகளில் ஐம்பது விகிதத்துக்கு மேல் எடுப்பவர்தான் ஜனாதிபதியாக வரலாம். ஆனால் தமிழ் மக்கள் வாக்களிக்காவிட்டால் விழும் வாக்குகளின் எண்ணிக்கை குறையும்.அதனால் விழுந்த வாக்குகளில் 50 விகிதம் என்பது ஒப்பீட்டளவில் குறையும்.அது தென்னிலங்கை வேட்பாளர்களுக்குச் சாதகமானது. எனவே பகிஸ்கரிப்பானது தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு சாதகமானது என்று ஒரு வியாக்கியானத்தைச் செய்தால் அதற்கு என்ன பதில்?

அதைவிட மேலும் ஒரு ஆழமான கேள்வியை இங்கு கேட்கலாம். உலகில் உள்ள எந்த ஒரு பேரரசும் அயலில் உள்ள சிறிய இனத்தை அல்லது நாட்டை ஒற்றுமைப்படுத்த விரும்புமா?அல்லது "டிவைட் அண்ட் ரூல்" என்று ஆங்கிலத்தில் கூறப்படுவதுபோல பிரித்துக் கையாள முயற்சிக்குமா? இந்தப் பூமிப் பந்தில் சிதறிப் போய் இருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை ஒன்றாகத் திரட்ட வேண்டுமா இல்லையா? தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வை,தேசிய உணர்வை பலப்படுத்த வேண்டுமா இல்லையா? அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதுதானே தேசியவாத அரசியல்?

ஒரு மக்கள் கூட்டத்தை அவ்வாறு ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளை ஒரு பக்கத்துப் பேரரசின் சதிவேலை என்று சந்தேகிக்கும் அறிவாளிகள் தங்களுடைய இனத்தை அவமதிக்கிறார்கள்தாங்கள் படித்த பல்கலைக்கழகங்களை அவமதிக்கிறார்கள். முற்கற்பிதங்களும் சந்தேகங்களும் ஊகங்களும் அவர்களுடைய அறிவை மழுங்கடித்துவிட்டன. அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தமது சொந்த மக்களைச் சிதறடிக்கும் சக்திகளுக்குச் சேவகஞ் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளும் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சினைகளே. எனவே அவற்றுக்கு உள்நாட்டுத் தீர்வு கிடையாது. அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. அப்படிப்பார்த்தால் அனைத்துலகத்தில் ஆதரவு அணியைத் திரட்டாமல் தீர்வு கிடைக்காது. அனைத்துலகத்தைத் திரட்டுவதென்றால் முதலில் ஈழத் தமிழர்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்களைத் திரட்டாமல் அனைத்துலக சமூகத்தை எப்படித் திரட்டலாம் என்று யாராவது கூறுவீர்களா?

## ஜரிஸ்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பன்னிரு நாட்களுக்கு நீராகாரம் இன்றி தனது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து நமது

இலட்சியத்துக்காக உழைப்பேன் என்று கூறிய தியாக தீபம் திலீபன் அணைந்து பல ஆண்டுகள் கடந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது.

1987ம் ஆண்டில் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் தற்போது தாயகத்தில் இடம்பெறுகிற அரசியல் சூழ்நிலையிலும் அவசியமான மற்றும் முக்கியமான கோரிக்கைகளாக உள்ளன.

வடகிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியான நில அபகரிப்பும் மற்றும் இராணுவ மையமாக்குதலும் இன்று வரை இடம் பெற்று கொண்டு வருகிறது. அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வழக்கு இன்றி அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

திலீபனின் போராட்டத்தின் முக்கிய காரணிகள் இன்றும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

திலீபனின் போராட்டம் வரலாறு மட்டும் அல்ல, இன்று நடைபெறுகின்ற தாயக நிலவரத்தில் அவசிய தேவையாகவும் அமைகின்றது. தமிழ் மக்களுக்காக போராடிய திலீபனின் விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டு தான் இருக்கிறது.

# வாழ்வா சாவா? சிந்தித்து வாக்களியுங்கள்...



சொக்கலிங்கம் லோஜினி
*ஊடக கற்கைகள் துறை*
*மூன்றாம் வருட மாணவி*
*யாழ் பல்கலைக்கழகம்.*

ஒரு வாழ்வா? சாவா? என்ற கட்டத்தில் தான் இலங்கை மக்கள் அனைவரும் இருந்து கொண்டிருக்கின்றோம். இது வரை இல்லாத அளவிற்கு இவ்வருடம் 17,140,354ம் மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக சுய சிந்தனையுடன் சிந்தித்து உங்களுடைய வாக்குகளை இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் வாக்களியுங்கள் என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகள் வரைக்கும் ஏன் திரும்பத் திரும்ப சொல்கின்றார்கள். இந்தத் தேர்தல் எவ்வளவுக்கு முக்கியம் என்று சொன்னால் நன்றாக சிந்தித்துப் பாருங்கள்! ஒரு நேரடியான பாதையில் சென்று கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் கூட்டத்திற்கு அந்த மக்கள் கூட்டத்தினுடைய தலைவன் ஒருவேளை மாறினாலோ அல்லது ஏதாவது தவறு செய்தாலோ அக் கூட்டத்திற்கு பெரும்பாலும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை.

ஆனால் ஏற்கனவே ஒரு குழப்பகர சூழ்நிலையில் திசை தெரியாமல் போய்க் கொண்டிருக்கின்ற மக்கள் கூட்டம்,அதால பாதாளத்தில் இருக்கக்கூடிய ஒரு நாடு அந்நாடு எப்படி பொருளாதாரத்தில் உயர்ந்து வரப்போகின்றது என்ற கேள்வி இருக்கும் சந்தர்ப்பத்தில் கண்டிப்பாக மிகச்சரியான ஒரு தலைவன் தான் உருவாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தான் தற்போது எங்கள் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றது. சொல்லப்போனால் ஒரு வாழ்வா? சாவா?என்ற கட்டத்தில் இன்றும் பொருளாதாரத்தில் ஒரு சரியான கட்டத்தில் நாம் இல்லை சிறிது சிறிதாக வளர்ச்சிஅடைந்துகொண்டிருக்கின்றோமே தவிர சரியான நிலைமைக்கு இன்றும் வரவில்லை.

அதனால் இவ் வருட தேர்தலானது ஏற்கனவே நாம் முதலில் சந்தித்த தேர்தலை போல் அல்லாமல் ஏதோ ஒரு தேர்தல் நடக்கின்றது சாதாரணமாக சென்று வாக்குகளை அளித்துவிட்டு வருவோம் என்ற அசாதாரண நிலையில் யாரும் செயற்படக் கூடாது.

சரியான முறையில் உங்களுடைய ஒவ்வொருவருடைய சுய சிந்தனையின் மூலமும் சுய விருப்பத்தின் பெயரிலும் மீண்டும் மீண்டும் சொல்லப்படுவது யாரோ ஒருவர் தேர்தலில் நிற்கின்றார் அவருக்கு சென்று வாக்களிங்கள் என்று யாரோ கூறுவதை கேட்டு வாக்களித்தால் கடைசிவரை அது உங்களது முடிவு கிடையாது. நீங்கள் ஒவ்வொருவரும் தான் சுய சிந்தனையின் மூலம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்பது கடப்பாடாகும். வாக்களிப்பு என்பது ஒவ்வொரு நாட்டினதும் பிரஜையினுடைய அடிப்படை உரிமையாகும். எனவே உங்களுடைய உரிமையை நீங்கள் யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

2022 ஆம் ஆண்டு தேர்தலே எமக்கு நல்ல அரசாங்கம் என்றால் என்ன? ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் என்றால் என்ன? ஒரு நாட்டின் அரசியல் எப்படி இருக்க வேண்டும்? வெளிநாட்டு உறவுகள் இலங்கைக்கு எவ்வாறு முக்கியம்?

மேலும் வெளிநாடுகளினுடைய உதவிகள் எவ்வாறு முக்கியம்? மற்றும் IMF என்றால் என்ன? போன்ற அனைத்தும் எல்லோருக்கும் நன்றாக விளங்கப்படுத்தியது தான் 2022ஆம் ஆண்டு தேர்தல்.

அதை வைத்துக்கொண்டு நீங்கள் ஒவ்வொருவரும் முடிவு செய்யுங்கள். யார் உங்கள் நாட்டிற்கு ஜனாதிபதியாக வர வேண்டும் என்று இங்கு இருக்கின்ற 17 மில்லியன் பேரும் அவரவரது சொந்த முடிவுகளின் பெயரில் தான் இத்தேர்தலில் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும். கண்ட பாட்டிற்கு நிறைய பேர் சொல்லும் கதைகளைக் கேட்டுக் கொண்டு வாக்களிக் காதீர்கள். ஒவ்வொருத்தரும் தற்பொழுது ஒரு கதை கூறிவிட்டு மீண்டும் வேறு கதைகளை கூறக் கூடியவர்களாகவும் இருப்பர். அதுபோல சமூக ஊடகங்களின் கருத்துக்களைப் பார்த்து விட்டு அந்த சிந்தனையின் மூலமும் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டாம். நன்றாக ஆராய்ந்து உங்களுக்கு யார் சரியான தலைவராக வரவேண்டும் மற்றும் அடுத்த ஐந்து வருடங்களுக்கு யார் நாட்டை ஆள வேண்டும்,நாட்டை மேலே கொண்டு செல்ல வேண்டும்,நாட்டின் பொருளாதாரத்தை மென்மேலும் வளர்க்க வேண்டும். நாங்கள் பழமையைப் போல மீண்டும் நல்ல நிலைமைக்கு வர வேண்டும் என்று சொன்னால் நீங்களாக சிந்தித்து நீங்களாக வாக்களியுங்கள்.

இதனால்தான் இந்த வருட தேர்தலானது அனைவரும் சுயமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. வாக்கு எங்களுடைய மிகப்பெரிய ஜனாதிபதி உரிமை அதை யாருக்காகவும் எப்பொழுதும் விட்டுக் கொடுக்கக் கூடாது. கண்டிப்பாக நாட்டின் பிரஜைகள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். அதனை அசாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

# ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக அதிகளவில் களமிறக்கப்பட்டுள்ள இராணுவத்தினர்

ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக பாதுகாப்புப் படைத்தலைவர்கள் அதிகளவான இராணுவத் தினரை முகாம்களில் இருந்து பொதுப்பாதுகாப்பிற்காக களமிறக்கியுள்ளனர்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அறுபத்தைந்தாயிரம் பொலிஸாரை வாக்களிப்புப் பணிகளுக்காக ஈடுபடுத்திய பின்னர், பொதுச் சொத்துக்கள், அரச சொத்துக்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க பொலிஸ் நிலையங்களில் போதிய ஆட்கள் இல்லாத காரணத்தினால் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனை

இவர்கள் அனைவருக்கும் கட்டளையிடும் வகையில், பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் கீழ் விசேட நடவடிக்கை அறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சிவில் தற்காப்புப் படை வீரர்களை ஈடுபடுத்துவதுடன், அரச நிறுவனங்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புக்காக பொலிஸ ாருக்கு உதவியாக அவர்களை ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில், பொலிஸாருக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத் துவதற்கான சட்டப்பூர்வ அதிகாரம் ஆயுதப்படைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடும் ஒழுங்கமைக் கப்பட்ட குழுக்களுக்குத் தேவைப்பட்டால் அதிகபட்ச பலத்தைப் பயன்படுத்துமாறு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.




## இலங்கையில் தொடரும் துஷ்பிரயோகங்கள் ஐ.நாவில் மனித உரிமைகள் ஆணையாளர்

(ஜெனிவா) -

இலங்கையில் பொலிஸ் மற்றும் பாது காப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப் படுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஐ.நா அமர்வில் மனித உரிமைக ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் 57/2 ஆம் அமர்வு நேற்று ஜெனீவாவில் ஆரம்பமானது.

இதன்போது இலங்கை தொடர்பான தமது வாய்மூல அறிக்கையை முன்வைத்து உரையாற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் டர்க், கடந்த காலங்களிலிருந்து இலங்கை விடுபட்டு புதிய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் நிலவுகின்ற சூழ்நிலைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச சமூகத்தின் அவதானம் தொடர்ந்தும் தேவைப்படுகிறது. தற்போது ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை இலங்கை எதிர்நோக்கியுள்ளது.

புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சியமைக்கு மாக இருந்தால். நாட்டின் பொறுப்புக்கூறல். நீதி மற்றும் மறுசீரமைப்பு நோக்கிய மாறுதல்களுக்கான நிலையான நடவடிக் கைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## திருமலையில் அதிகரிக்கும் சிங்களக் குடியேற்றங்கள்

தமிழர்களின் சரித்திரம் மற்றும் கலாசாரத்தை அழிப்பதே பிரதான நோக்கம். த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் வெளியிட்ட ஆய்வில் சுட்டிக்காட்டு.

தமிழ் மக்களின் சரித்திரம் மற்றும் கலாசாரத்தை அழிப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு திருகோணமலையில் சிங்களக் குடியேற்றம் முன்னெடுக்கப்படுவதாக ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் வெளியிட்ட ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் சொஒக்லன்ட் இன்ஸ்டிடி திட்டு என்ற கல்வியகத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் நில அபகரிப்புக்கள் தொடர்பான தரவுகளையும், ஆவ மக்கிய ஆக்கிரமியம் உள்ள டக்கிய "ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை இலங்கையில்

தமிழர் தாயகத்தை இலக்கு வைக்கும் நில அபகரிப்பு" எனும் தலைப்பிலான 32 பக்க ஆய்வறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

### 76 வருட

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வாளர்களும் கூட 'ஆம் அவர்களுக்கு ஒரு ஆதரவு அலை இருந்து வருகிறது அதனை மறுக்க முடியாது' என்ற பீடிகையுடனே தமது கருத்துக்களை முன் வைக்கிறார்கள். அதே வேளையில் மக்கள் பிரச்சாரங்களின் வாக்குறுதிக்காக காத்திருக்கும் அதே நேரம் சஜித் மற்றும் ரணில் ஆகியோர் இந்த தடவை முன் வைத்திருக்கும் பிரச்சார ஸ்லோகங்கள் பெரிதாக வாக்காளர்களை கவர்வதாக இருக்கவில்லை.

அந்த வகையில் தேர்தல் கருத்துக்கணிப்பின் அடிப்படையில் வாக்களிக்கும் மக்கள் பல்வேறு பிரிவிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

1.வாக்குரிமை இருந்தும் வாக்களிக்க விரும்பாதவர்கள்.

2. அரசியல் தலைவர்கள் மேல் ஆர்வம் கொண்டவர்கள்.

3.தேர்தல் குறித்து ஆர்வம் இல்லாதவர்கள்.

4. சுயமாக முடிவுகளை எடுத்து தமது உரிமையை நிலை நாட்டுபவர்கள்.

5.உந்துதலின் பெயரில் செயல்படுபவர்கள்

6. தேர்தல் பிரச்சாரங்களுக்காக காத்திருப்பவர்கள்.

பொதுவில் மக்களது கருத்தானது, குறித்த அரசியல் கட்சிகள் தாம் வீழ்த்த விரும்பும் முதன்மை எதிரி யார் என்பது அவர்களுக்கே தெளிவில்லாமல் இருப்பதும், இலங்கையின் பொருளாதார யதார்த்தங்களுக்கு துளியும் சம்பந்தமில்லாத வாதத்தில் கோமாளித்தனமான வாக்குறுதிகளை வழங்குவது என்பதையும் மக்கள் முன்வைக்கின்றனர். அது மட்டுமின்றி 'ஒரு தடவை அவர்களுக்கும் கொடுத்துப் பார்ப்போம் ' என்பது அதாவது ' இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கின்றோம், கடைசியில் இன்றைய வங்கிரோத்து நிலை தான் எமக்கு எஞ்சி இருக்கின்றது என்ற ஆதங்கமே இந்த பேச்சுக்களின் தொனிக்கின்றது.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட 76 வருட கால வரலாற்றில் மிக நிர்ணயமான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றது.

### காங்கேசன்துறை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படுத்தலாம். பிரித்தெடுத்த குவாரி தளங்களை, கிடங்குகளை மறுசீரமைத்தல், பூர்வீக தாவரங்களை மீண்டும் நட செய்தல் மற்றும் உள்ளூர் வனவிலங்குகளுக்கு ஆதரவாக செயற்கை வாழ்விடங்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும். கூடுதலாக, குவாரியின் அளவைக் குறைப்பது மற்றும் நிலையான பிரித்தெடுக்கும் முறைகளைப் பின்பற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க உதவும். மறுசுழற்சி செய்யப்பட்ட கான்கிரீட் அல்லது பொறிக்கப்பட்ட கல் போன்ற மாற்று கட்டு மானப் பொருட்களைப் பயன்படுத்துவது, சுண்ணாம்புக்கல்லின் தேவையைக் குறைத்து, குவாரியின் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும். தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள், மிகவும் திறமையான சிமென்ட் உற்பத்தி செயல்முறைகள் மற்றும் குறைந்த கார்பன் சிமென்ட் மாற்றுகளின் வளர்ச்சி போன்றவை தொழில்துறையின் சுற்றுச்சூழல் தடயத்தை மேலும் குறைக் கலாம்.

காங்கேசன்துறை சுண்ணாம்புக் கற்பாறைகள் யாழ் குடாநாட்டு மற்றும் ஒட்டுமொத்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பங்கைக் கொண்ட ஒரு பெறுமதிமிக்க புவியியல் வளமாகும்.

அதிக கால்சியம் கார்பனேட் உள்ளடக்கம் மற்றும் புதைபடிவ உள்ளடக்கம் உள் ளிட்ட அவற்றின் தனித்துவமான பண்புகள் கட்டுமானம் மற்றும் சிமெண்ட் உற்பத்திக் கான முக்கியப் பொருளாக அமைகின்றன.

இருப்பினும் வாழ்விட அழிவு மாசுபாடு மற்றும் கழிவு உருவாக்கம் உள்ளிட்ட சுண்ணாம்புக் கல் குவாரியின் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறிப்பிடத்தக்கவை. காங்கேசன்துறை சுண்ணாம்புக் கல்லின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் மாற்று பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை ஆராய்வது அவசியம்.

சுற்றுச்சூழலுடன் பொருளாதார நன் மைகளை சமநிலைப்படுத்துவதன் மூலம் பிராந்தியத்தின் புவியியல் மற்றும் சுற்றுச் சூழல் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியும் அதே நேரத்தில் அதன் பொருளாதார வளர் ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்க முடியும்.



அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...
கிருபா லேணர்ஸ்
කිරුබා ලෑර්නර්ස්
KIRUBAA LEARNERS
அ. கிருபாகரன்
- அதிபர் -
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறையில் கட்டணங்கள்.
இரவிலும் வாகனப் பயிற்சிகள்.
We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777